Ayoob, S.M. (2019). The Cultural Mobility: Some key observations. In A. M.M. Musthafa (Ed.), *Sustainable development and Socio-cultural trends*. Oluvil: Faculty of Management and Commerce, SEUSL.

pp.104-120

---

# பண்பாட்டு அசைவுகள்: தென்கிழக்கு முஸ்லிம்களை மையப்படுத்திய சில அவதானக் குறிப்புகள்

**கலாநிதி எஸ்.எம். அய்யூப்**
தலைவர், சமூகவியல் துறை
சிரேஷ்ட விரிவுரையாளர்
கலை கலாசார பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
0094769643899, மின்னஞ்சல்: ayoobsm@seu.ac.lk, ayoobsm2004@gmail.com

**கட்டுரைச் சுருக்கம்:** ஆரோக்கியமும் நலவாழ்வும் (Health and Well-being) எல்லா மக்களுக்கும் சென்று சேர வேண்டும் என்பது நிலையான அபிவிருத்தி இலக்குகளில் (Sustainable Development Goals) ஒன்றாகும். ஒரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்கள் ஆரோக்கியத்தையும் நலவாழ்வையும் கருத்திற் கொள்ள வேண்டும். தென்கிழக்குப் பிராந்திய முஸ்லிம்களின் வாழ்வில் பண்பாடுகள் இந்த விடயத்தை கருத்தில் கொண்டே அதன் அங்கத்தவர்களை காலங்காலமாக பயிற்றுவித்து வந்திருக்கின்றது. பண்பாடுகளில் தோற்றம் பெற்ற அசைவுகள் இவ் இலக்குகளை மீறுகின்றனவா அல்லது மேம்படுத்தியிருக்கின்றனவா எனும் கருத்து நிலைகள் பொதுவாக புத்திஜீவித்துவ மட்டங்களில் நிலவுகின்றது. பண்பாடுகளில் ஏற்படும் அசைவானது ஆரோக்கியத்தையும் நலவாழ்வையும் ஊறுவிளைவிக்காது காத்திட வேண்டும். இவ்வாய்வு தென்கிழக்கு முஸ்லிம்களின் பாரம்பரிய பண்பாட்டை சுருக்கமாகவும் அவற்றில் ஏற்பட்ட அசைவுகளை ஓரளவு விரிவாகவும் ஆராய்வதோடு ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வு கருத்தில் கொள்ளப்படும் மற்றும் கருத்தில் கொள்ளப்படாத சந்தர்ப்பங்களையும் சுட்டிக் காட்டுகின்றது.

## அறிமுகம்

ஒரு சமூகத்தின் மொத்த வாழ்வொழுங்கையும் பண்பாடு (Culture) எனும் பதம் குறிக்கின்றது. தென்கிழக்கு முஸ்லிம்களின் தொன்று தொட்டு அறுபடாது வந்த பண்பாட்டில் பல அசைவுகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. விவசாயத்தில் புகுத்தப்பட்ட இயந்திரமயமாக்கம், காணிச் சீர்திருத்தம், இலவசக்கல்வியின் அறிமுகம் போன்ற காரணிகள் நடுத்தர வர்க்கத்தையும் கற்கத்தூண்டி பாரிய சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களை இப்பிரதேசத்தில் ஏற்படுத்தியதாக விக்டர் (1997) குறிப்பிடுகின்றார்.

அறிவியல் புலத்தில் பண்பாடு எனும் சொல்லை வரையறுப்பதில் பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. குரோபரும் குளுக்கானும் 160 இற்கு மேற்பட்ட வரையறைகளைத் தொகுத்துத் தந்துள்ளார்கள். புகழ்பெற்ற மானிடவியலறிஞர் **எட்வின்** டைலரின் வரையறையே மிகவும் பிரபல்யமானது. அவர் தனது தொன்மைப் பண்பாடு (Primitive Culture) எனும் நூலில்

‘‘பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்’’ என குறிப்பிடுகின்றார் (பக்தவத்சலபாரதி, 1999)

## உணவும் பானமும்

ஒரு சமூகத்தின் உணவும் அதனையொட்டிய பானமும் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாகவும் பண்பாட்டை மீறாத வகையிலுமே அமைந்து காணப்பட வேண்டும். பண்பாட்டை மீறிய உணவுகளை பொதுவாக சமூகங்கள் ஏற்பதில்லை. இதனையே ‘‘ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவியக்கங்களை உணர அவர்தம் உணவுப் பழக்கவழக்கங்களை கூர்ந்து நோக்கவேண்டும்’’ என பண்பாட்டு ஆய்வாளர் பரமசிவன் (2003) குறிப்பிடுகின்றார். முஸ்லிம் சமூகத்தின் உணவும் பானமும் இஸ்லாமிய சமயத்தின் வரையறைகளை அடிநாதமாகக் கொண்டதாகவும் அத்தகைய உணவுகள் ஹலாலானவை என்றும் அவற்றிற்கு மாற்றமானவை ஹறாமானவை எனவும் இஸ்லாமிய சட்டக்கலை வல்லுனர்களால் தெளிவுபடுத்தப்படுகிறது. நவீனத்துவத்தின் இராட்சதப் பாய்ச்சல்கள் சமூகத்தின் பண்பாட்டை ஊடறுத்துச்சென்று பண்பாட்டில் அசைவுகளை ஏற்படுத்தினாலும் இந்த அடிப்படை மூலம் மாறாது காலங்காலமாக முஸ்லிம் சமூகத்தால் பின்பற்றப்படுகின்றது.

பொதுவாக முஸ்லிம்களின் உணவுப் பண்பாட்டில் சடுதியான பல மாற்றிங்கள் நிகழ்ந்துள்ளன. போசாக்கு மற்றும் ஆரோக்கியம் போன்ற அவசியமான அம்சங்களை விட சுவை (Taste) குறித்த அக்கறையே அதிகம் முன்நிலைப்படுத்தப்படுகின்றன. உடம்பிலுள்ள ஒவ்வொரு உறுப்புக்களின் தொழிற்பாட்டிற்கும் எத்தகைய உணவுகள் உறுதுணை செய்கின்றன எனும் தேடலும் அதனைக் கருத்தில்கொண்ட உணவுகளும் முஸ்லிம்களிடம் ஆரம்பத்தில் காணப்பட்டன. அந்த அத்தனை தேடல்களும் தொலைதூரத்தில் நிறுத்தப்பட்டு இன்று நாக்கின் நலனே மையப்படுத்தப்படுகின்றது. இதனால் ஆரோக்கியத்தின் ஆட்சியாளர்களாக இருந்த முஸ்லிம் சமூகம், நோய்களின் காவலாளியாக மாறிக்கொண்டிருக்கின்றது. நீரில் அவித்தல், நீராவியில் வேகவைத்தல், வறுத்தல், சுடுதல், புகையிடல், வற்றலாக்குதல் போன்ற உணவுத் தயாரிப்பு முறைகளில் பொரியல் ஏனைய உணவு முறைகளிலொன்றாகவே அன்று காணப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் பொரியல் உணவு புது மாப்பிள்ளைக்கு மட்டும் கொடுக்கப்பட்டது(சம்சுதீன் மௌலானா,1997). இன்றைய முஸ்லிம்களின் உணவுமுறையில் பொரியலும் எண்ணெயை மையப்படுத்திய உணவுகளுமே பிரதான கவனயீர்ப்பாக மாறிவருகின்றன. மேற்குலகில் கண்டுபிடிக்கப்பட்ட பாம் ஒயிலின் பாவனையை கீழை உணவுகளில் அதிகரிப்பதற்கு எண்ணெய் மாபியா பொரியலை அதிகமதிகம் அறிமுகப்படுத்தியது (பரமசிவன், 2003). இந்தப் பொறிக்குள் முஸ்லிம் சமூகமும் லாவகமாக மாட்டிக்கொண்டு தனது பாரம்பரிய உணவுமுறையை மறந்தே போனது. அவித்து பச்சைமிளகாய் கடையலோடு சாப்பிடப்பட்ட மரவள்ளிக்கிழங்கும், மிளகு ஆணமாய் சமைத்து உண்ணப்பட்ட கிழக்கன் மீனும், தேங்காய்ப்பால் சேர்த்து பாலாணமாகக் காய்ச்சப்பட்ட கீரிமீனும் இன்று பொரியல் செய்தே சாப்பிடப்படுகின்றன.

தென் கிழக்கு முஸ்லிம்களின் பிரதான உணவு நெல்லரிசிச் சோறாகும். தவிடு நீக்காத கைக்குத்துப் புழுங்கல் அரிசியே அதற்குப் பயன்படுத்தப்பட்டது. பெரும்பாலும் மூன்று வேளையும் சோறே பிரதான உணவாக உட்கொள்ளப்பட்டது. விவசாய சமூகத்தின் நீடித்த கனநேர உழைப்பிற்கு நெல்லரிசிச் சோறே நின்றுபிடித்தது. பெருநெல், கருப்பன், சீனட்டி, பச்சைப்பெருமாள், நொறுங்கன், குருவிநெல் போன்ற நெல் இனங்களில் செய்யப்பட்ட அரிசி, சோறு சமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. அரிசியானது அரிக்கப்பட்டு பின்னர் பானையில்

இடப்பட்டு அளவோடு தண்ணீர் வைக்கப்பட்டு கொதிக்கும்போது கஞ்சி வடிக்கப்பட்டு விறகு அடுப்பில் ஆக்கப்பட்டது. இம்முறையில் இன்று பல மாற்றங்கள் தோன்றியுள்ளன. பாரம்பரிய இந்த அரிசியினங்கள் மறைந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசிகளும் ஏனைய அரிசிகளும் அவ்விடத்தை நிறைத்துள்ளன. மண்பானைகள் மறைந்து அலுமினியப் பானைகளும் விறகடுப்புக்கள் விலகி றைஸ் குக்கர்களும் தோன்றிவிட்டன. போசாக்குள்ள பானமாக வடித்துக்குடிக்கப்பட்ட கஞ்சியை யாரும் இன்று வடிப்பதுமில்லை குடிப்பதுமில்லை. அதேபோல் சோறும் கறியும் என்ற பாரம்பரிய நிலைக்கப்பால் புரியாணி, பிறைட்றைஸ் போன்ற துரித உணவுகளும்(Fast foods) நிறைந்துவிட்டன.

அரிசியை விடுத்து குரக்கன், சோளம், மரவள்ளி, வற்றாளை போன்ற சிறுதானியங்களும் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டன. இன்று குரக்கன் சீனி நோயாளர்களுக்கான உணவு அல்லது கஞ்சி விற்பனையாளர்களுக்கான பொருள் எனும் நிலைக்குள் சுருங்கிவிட்டது. ‘பஞ்சம்தாங்கி’ எனப்பெயரெடுத்த மரவள்ளி, இறைச்சிக் கறிக்குள் சேர்ப்பதற்கும் அந்திபட்ட நேரம் கிழங்குப்பொரியலாக டேஸ்ட் கடைகளில் விற்பதற்குமான பொருளாக மாறிவிட்டது. 1940களிலேயே கோதுமையின் பயன்பாடு தொடங்கியபோதும் அண்மைக் காலம்வரை அது முக்கியம் பெறவில்லை. இன்று கோதுமையினால் செய்யப்பட்ட ரொட்டி, பராட்டா, கொத்து போன்றவை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி உண்ணும் தின்பண்டங்களாக மாறிவிட்டன. கோதுமை மாவினால் செய்யப்பட்ட பாண்(டீசநயன) இழிவுப் பண்டமாக ஆரம்பத்தில் கணிப்பிடப்பட்டது. வீட்டிலே சோறு சமைக்காதபோது பாண் சாப்பிடுவார்கள். இந்தப்பாண் யாருக்கும் தெரியாமல் இரகசியமாகவே கொள்வனவு செய்யப்பட்டு, தாளினால் சுற்றப்பட்டு வீட்டிற்குக் கொண்டுவரப்படும். இன்று பாண் முஸ்லிம் சமூகத்துக்குள் நுழைந்துவிட்டது. அதன் ‘இழிவு’ நிலையும் மாறிவிட்டது.

மரவள்ளிக் கிழங்கு, மாட்டிறைச்சி, மாட்டுக்குடல் போன்றவை பொரிக்கப்பட்டு மற்றும் மாட்டின் எலும்புகள் சூப்பாகக் காய்ச்சப்பட்டு விற்பனை செய்யப்படும் டேஸ்ட் கடைகள் 1990களுக்கு பின் அதிகரித்துவிட்டன. மாலை நேரத்தில் கூட்டம் கூட்டமாக அலையும் இளைஞர்களை இப்பிரதேசத்தில் காணலாம். 2010 களில் பரவலாகவும் 2010 களின் பின் மிகவேகமாகவும் அதிகரித்துச் செல்லும் மேற்குலக உணவு வடிவங்களான டிரசபநசஇ ாழவனழபஇ வறளைவஇ ளரடிஅயசனைெஇ பொரித்த கோழித்துண்டுகள் (Wings, Drumstick) போன்றவற்றை விற்பனைசெய்யும் கடைகள் பல தோன்றியுள்ளன. இக்கடைகளின் கவர்ச்சியும் இவ்வுணவுகளின் செயற்கைச் சுவையும் குடும்பத்தோடு சென்று ருசிக்கச் செய்கின்றன. நாளெல்லாம் உழைக்கும் வியாபார சமூகத்திற்கும், வீட்டுக்குள் கட்டுண்டுபோன அங்கத்தவர்களுக்கும் இந்த மேற்கு வடிவ உணவகங்கள் களிப்பூட்டும் மற்றும் கவலையை மறக்கச்செய்யும் நிலையங்களாக மாறிவருகின்றன.

வள்ளல் கொடி, பொன்னான் கண்ணி, முல்லை, முசுட்டை, முசுமுசுங்கை, காரை, கானாந்தி, முடிதும்பை, தகரை, திராய், பசளி, குமிட்டி, மணலி, எருமைநக்கி, பிரண்டை, தூதுவளை, அகத்தி போன்ற கீரைகள் முஸ்லிம் சமூகத்தின் உணவுகளில் குறைந்துவிட்டன. பசளையிடப்பட்டு வியாபாரத்திற்காக செய்யப்படும் வல்லாரையும், பொன்னான்கண்ணியும் ஓரளவு சந்தையில் காணப்படுகின்றன.

பாரம்பரியமாகச் சாப்பிட்ட பழங்களும் புதியவகை காலணித்துவ பழங்களால் குறைந்து போய்விட்டன. பச்சைத் தோடம்பழம் சந்தையை விட்டும் முஸ்லிம்களின் மனதை விட்டும் தூரமாகி நாட்கள் பல ஆகிவிட்டன. அப்பிளும் ஒரேஞ்சும் கவர்ச்சிப் பழங்களாக பரிணமித்துவிட்டன. பெரும்பாலான ஊர்களில் கோலோச்சிய பனம்பழம் இன்று பனங்கிழங்கிற்காக மட்டுமே புதைக்கப்படுகின்றன. வீடு முழுக்க மணம் பரப்பி, கரச்சோறு முழுக்க சுவையூட்டிய கிண்ணம் பழம் காணாமலே போய்விட்டது. இவைதவிர பிரப்பம்பழம்,

காரை, சூரை, தண்ணிச்சோத்துப்பழம், நறுவுழி போன்ற பழங்களின் பெயர்களே இளைய தலைமுறைக்கத் தெரியவில்லை. வீட்டில் வருபவர்களை (Visitors) ஆதரிப்பதற்காக அவல், சீனிமா, பணியாரம், சோவி, முறுக்கு போன்ற வீடுகளில் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பண்டங்களே பரிமாறப்பட்டன. இன்று அவ்விடத்தை மிக்ஸர், உறைப்பு முறுக்கு, கேக், சம்சா, பெட்டிஸ், கொத்து போன்றவை ஆக்கிரமித்துவிட்டன.

ஆரம்ப காலங்களில் சோறு விற்கும் கடைகள் குறைவாகவே காணப்பட்டன. மனைவியோடு சண்டை பிடிப்பவர்கள் சோறு உண்பதற்கு அலைமோதும் நிலை காணப்பட்டது. இன்று சோறு விற்கும் கடைகள் அதிகம் காணப்படுகின்றன. இந்தியா போன்ற நாடுகளில் சோறு நிறுத்து விற்கும் நிலை இன்னும் இங்கு தோன்றவில்லை ஆனால் பங்குகளாக விற்கப்பட்ட மீன் இன்று நிறுத்துவிற்கப்படுகின்றது.

தென்கிழக்குப் பிராந்தியத்தில் தென்னையும் பனையும் தாராளமாகக் காணப்படுவதால் இவைதரும் இயற்கைப் பானங்களை ஏராளமாகப் பயன்படுத்தினர். இவற்றின் பாவனை வெகுவாகக் குறைந்து பெப்சி, கொக்காகோலா போன்ற காபனேற்றப்பட்ட பானங்களும் செயற்கைப் பழச்சாறுகளும், பக்கற்றில் அடைக்கப்பட்ட பால்வகைகளும், யோகட், ஐஸ்கிறீம் போன்றவைகளும் முஸ்லிம்களின் பாவனையில் நிறைந்து போயுள்ளன. உலகமயமாக்கத்தின் கெடுபிடிக்குள் சிக்கிக்கொண்ட எல்லா சமூகங்களுக்கும் இது பொதுமைதான் எனக்கொண்டாலும், தென்னை இளநீரும், இயற்கைத் தோடம்பழச்சாறும், எருமைத்தயிரும், பசுப்பாலும் அபரிமிதமாகக் காணப்படும் ஒரு சமூகத்தில் செயற்கைப் பானங்கள் இடம்பிடிப்பதே வேதனைக்குரிய விடயமாகும். இயற்கைப் பானங்கள் மட்டுமே தாகத்தை உண்மையாகத் தணிக்கின்றன எனும் விஞ்ஞான உண்மையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தண்ணீரானது முஸ்லிம்களின் வாழ்வியலோடும் சமயச் சடங்குகளோடும் பின்னிப்பிணைந்த ஒன்றாகும். குடிநீருக்காகவும், விவசாயத்திற்காகவும், சமயச்சடங்கிற்காகவும், இன்ன பிற அம்சங்களுக்காகவும் பாரியளவு தண்ணீர் தேவைப்படுகின்றது. "ஆரம்ப குடியேற்றக் காலத்தில் கிணறுகள் இருக்கவில்லை ஆறு, குளம், குட்டை போன்ற நீர் நிலைகளில் இருந்தே நீரை வீட்டுக்குக் கொண்டுவந்தனர். இது சிரமமானபோது தமது வளவுக்குள் 'பூவல்' அகழ்ந்து நீர் எடுத்தனர். இதன் பரிணாமமே கிணறு ஆகும்" (அஹமட் லெப்பை, எம்.ஐ, 2007∴2008). பிற்காலத்தில் வீடு கட்டும்போது கிணற்றுக்காகத் தனியான இடம் ஒதுக்கப்பட்டது. கிணற்றுக்கான கொட்டுகளை தயாரிப்பதற்கு பட்டுப்போன பெரிய போர் மரங்கள் பயன்படுத்தப்பட்டன. பின் சீமெந்துக் கொட்டுக்கள் பாவனைக்கு வந்தன. கலங்கிய கிணற்றுநீர் தெளிவதற்காக தேத்தா மர விதைகளை கிணற்றுக்குள் போடும் வழக்கமும் ஆரம்பத்தில் முஸ்லிம்களிடம் காணப்பட்டது (அஹமட் லெப்பை, எம்.ஐ, 2007/2008). குடிப்பதற்கான மதுரமான தண்ணீரை வழங்குதல் எனும் தலையாய பாத்திரத்தை ஆற்றிய கிணறு இன்று அதன் முக்கியத்தை இழந்துவிட்டது.

குடிப்பதற்கான நீரை அரசாங்கம் வழங்குகின்றது. குளேரின் ஏற்றப்பட்ட நீரே எல்லோருக்குமான நீராகிப் போய்விட்டது. இன்று புதிதாகக் கிணறுகள் தோண்டப்படுவதில்லை. பழைய கிணறுகள் நிரந்தரமாக மூடப்படுகின்றன் அல்லது கொங்கிரீட் போட்டு மூடப்பட்டு குடிநீரல்லாத ஏனைய தேவைகளுக்காக பாவிக்கப்படுகின்றன. சுனாமிக்குப் பின்னர் பல கிணறுகள் உவர்த்தன்மையாக மாறிவிட்டன. மலசலகூடத்தின் கழிவுநீர் கிணற்றுக்குள் கலக்கும் அபாயம் இருப்பதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரவிக்கின்றனர். ஆரம்பகாலங்களில் தண்ணீரையென்ன பாலும் தயிரும் கூட இலவசமாகவே மக்கள் அடுத்தவர்களுக்கு வழங்கினார்கள். இன்று விதவிதமான அளவுகளில் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் விற்கப்படுகின்றது. ஒரு லீற்றர் தண்ணீருக்கும் பெற்றோலுக்கும் அதிக வித்தியாசமில்லாத நிலமை காணப்படுவது குடிமக்களுக்கு கவலைதரும் விடயமாகும்.

ஆரம்பகாலங்களில் தண்ணீர் மண்முட்டிகளில் தேக்கிவைக்கப்பட்டு குளுமையாகக் குடிக்கப்பட்டது. நெல் உமியில் புகைவைத்து அதன்மேல் மண்முட்டியை கவிழ்த்து பின்னர் அப்பானையில் 'புகைத்தண்ணீர்' குடிக்கும் வழக்கமும் காணப்பட்டது. நோன்பு காலங்களில் இத்தண்ணீருக்கான கிராக்கி அதிகமாகக் காணப்பட்டது. இந்நடைமுறைகள் முற்றாக அழிந்துவிட்டன.

விவசாயத்திற்காக அதிகநீர் தேவைப்படும் இப்பிரதேசத்தில் குடிநீருக்கான நீரும் குளங்களிலிருந்தே தருவிக்கப்படுகின்றன. விவசாயத்திற்கான நீரை விநியோகிப்பதில் பாரிய பல முரண்பாடுகள் தோன்றியிருக்கும் நிலையில், குடிநீருக்கான நீரைப் பெறுவதிலும் அண்மைய எதிர்காலத்தில் பாரிய பல மோதல்கள் தோன்றலாம். அடுத்த உலகப்போர் நீருக்காக மூழும் எனும் உலகவங்கியின் அறிக்கையும் இங்கு கவனிக்கத்தக்கது.

## வீடு

கல்லும் மண்ணும் மரமும் இரும்பும் சீமெந்தும் கொண்ட கலவை மட்டுமல்ல வீடு என்பது. வீடு என்பது பண்பாட்டின் குறியீடு. வீடு என்பது ஒரு சமூகத்தின் வரலாறு. வீடு என்பது ஒருவரின் சமூக அந்தஸ்து. இலுக்குப் புல்லைக் கூரையாகவும், காட்டு மரங்களை கால்களாகவும் (தூண்களாகவும்), மாங்குக் கம்புகளை ஏனைய தேவைக்கும் பயன்படுத்தி, கட்டப்பட்ட குறட்டுக்கம்புகளில் களிமண்ணை உருட்டி உருட்டி அப்பி குடிசை வீடுகட்டி இப்பிரதேச மக்கள் வாழ்ந்தனர். அதன்பின் தென்னை ஓலை, வைக்கோல் வேயப்பட்ட களிமண் வீடுகள் தோற்றம் பெற்றன. பின்னர் செங்கற்களைக் களிமண்கொண்டு கட்டும் வீடுகளும், பின் செங்கற்களை சீமெந்து கொண்டு கட்டும் வீடுகளும் தோன்றின. தற்காலத்தில் சீமெந்துக்கல் கொண்டு கட்டும் வீடுகளும், கொங்கிரீட்டினால் எழுப்பப்படும் நவீன மாடிவீடுகளும் தோற்றம்பெற்று வருகின்றன. கிண்ணியா, மூதூர் போன்ற பிரதேசங்களில் இன்று கட்டப்படும் சாதாரண வீடுகளை ஒத்தவை இப்பிரதேச முஸ்லிம்கள் இடித்துத்தள்ளும் வீடுகளாக மாறிவருகின்றன.

20ம் நூற்றாண்டுகளுக்குப் பின்புதான் சுட்ட செங்கல்லும், சீமெந்தும் பாவனைக்கு வந்தன. பெரும்பாலும் இவ்வீடுகள் செல்வந்தர்களாலேயே கட்டப்பட்டன. ஆனால் மத்திய கிழக்கு வேலைவாய்ப்பின் பின் சாதாரண மக்களால்கூட சீமெந்து வீடுகளைக் கட்ட முடிந்தன(அய்யூப், எஸ்.எம், 2007).

இங்குள்ள வீடுகள் பெரும்பாலும் வேலிகளைக்கொண்டே அமைந்திருக்கும். ஆரம்பகாலத்து வேலிகள் பூவரசு, முள்முருக்கை, கிளிசரியா, முருங்கை போன்ற தளை கம்புகளையும் மஞ்சுணா, வேப்பை, விண்ணாங்கு போன்ற ஏனைய கம்புகளையும்கொண்டு அமைக்கப்பட்டன. இக்காலத்து வேலிகள் கற்களையும் சீமெந்துகளையும் கொண்டு கட்டி வேலைப்பாடுகளுடன்கூடிய வாயிற் கதவுகளும் (Gate) போடப்படுகின்றன. பல இடங்களில் இக்கதவுகள் மின்சாரத்தில் மூடித்திறக்கின்றன.

பெரும்பாலான வீடுகள் சாதாரண அல்லது நவீன வசதிகளுடன்கூடிய கழிப்பறைகளைக் கொண்டிருக்கின்றன. வீட்டின் பின்புறம் 'புழுக்கடை'யாக அதாவது கழிவறையாக பாவிக்கும் வழக்கமும், ஆண்கள் காடுகளுக்கு கழிவகற்றச் செல்லும் வழக்கமும் இன்று அடியோடு மாறிப்போய்விட்டது. வீட்டு வளவுக்குள் மரங்கள் நடும் வழக்கம் குறைந்து அலங்காரக் கற்களால் நிலத்தை மூடும் போக்கும், ஆடு, மாடு, கோழி வீட்டுக்கோடியில் வளர்க்கும் வழக்கமும் குறைந்து, லவ்பேர்ட்ஸ் மற்றும் அழகிய மீன்கள் வளர்க்கும் போக்கும் அதிகரித்து வருகின்றது.

இங்குள்ள வசதியற்ற வீடுகளில்கூட ஆண்களைக் கதிரையில் அமரவைக்கும் நடைமுறை இருந்துவருகின்றது. றப்பர் கதிரையின் வரவு ஏற்படுத்திய புரட்சி அது. கொழும்பில் வீடு ஒன்று இருப்பது நல்லது எனும் மனோநிலை பணம் படைத்தவர்களிடையேயும் ஏனைய மெல்லிய பணக்காரர்களிடையேயும் நிலவிவருகின்றது. ஏனைய சமூகத்தவர்களைப் போல் அல்லாது முஸ்லிம்கள் தமது வீடுகளில் நாய் வளர்ப்பதில்லை.

திருமணம் முடிக்கும் தம்பதியினருக்கு பெண்வீட்டார் வீடு வழங்கும் நடைமுறை இங்கு காணப்படுகின்றது. கணவன் வீடு கட்டும் புதியதொரு நடைமுறை இப்பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டும் அதன் வீரியம் இன்றும் முழுமையடையவில்லை. அதேபோல் அநேக ஆண்கள் மனைவி வீட்டிலேயே தங்கிவிடும் வழக்கமும் இங்கு காணப்படுகிறது. தமது பெண்பிள்ளைக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டு, புதுமணத் தம்பதியினருக்குப் புது வீட்டை வழங்கிவிட்டு பெற்றோர் வெளியேறும் நிலையும் இங்கு காணப்படுகின்றது. இதனால் தனிக்குடும்பத்தின் (Nuclear family) பண்புகளே கூட்டுக்குடும்பத்தின் பண்புகளைவிட அதிகமாக இச் சமூகத்தில் காணப்படுகின்றது.

வீடுகட்டமுனையும் ஒரு குடியானவன் 'நிலமெடுத்தல்' எனும் பெயரில் அதற்குரிய நபரை அழைத்துவந்து வீடுகட்டுவதற்கான முதல் கல்லை சில சடங்குகளுடன் செய்துவைக்கும் வழக்கமும், 'சாமூலை' எனச்சொல்லி குறிப்பிட்ட நிலப்பகுதியை வீடுகட்டாது புறமொதுக்கும் நடைமுறையும் இன்று இல்லாமல் போய்விட்டது. வீட்டைக் கட்டுவதற்கான அமைவிடத்தைத் தீர்மானித்தல், அதனை வடிவமைத்தல் போன்ற செயற்பாடுகள் துறை சார்ந்தோரால் ஆற்றப்படுகின்றது.

மாடி வீடு கட்டும் நோக்கோடு போடப்படும் அத்திவாரங்களில் பெரும்பாலான கிராமம் சார் இடங்களில் கீழ் மாடி (Ground floor) மட்டுமே கட்டப்படுகின்றன. இதனால் வெப்ப காலங்களில் இதனுள்ளே வசிப்பவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்ளும் நிலையையும் இப்பிரதேசத்தில் பரவலாக காணலாம். வீடு கட்டப்படுவதன் இலக்கு ஒரு சைகையாக கூட இதனைக் கொள்ளலாம்.

**உடையும் அணிகலனும்**

பொருள்சார் பண்பாட்டின் கூறுகளுள் உடையும் அணிகலன்களும் முக்கியமானவை. பண்பாட்டின் கட்புலன் வடிவம் இவையாகும். உடையும் அணிகலன்களும் சமூகமயமாக்கல் செயற்பாட்டால் ஒரு தனியனுக்கு ஒரு சமூகத்திடமிருந்து சென்றுசேர்கின்றன. பண்பாட்டைமீறிய உடையும் அணிகலன்களும் சமூகத்தில் நன்மதிப்பைப் பெறுவதில்லை.

தென்கிழக்குப் பிராந்திய முஸ்லிம் சமூகத்தின் ஆடைகளும் தனித்துவம் மிக்கதாக காணப்பட்டது. ஆண்கள் கைத்தறியால் நெசவு செய்யப்பட்ட தடித்த சாறம் அல்லது வெள்ளைநிற வேட்டி அணிந்து பெல்ட் எனும் பட்டிகளால் கட்டிக்கொள்வார்கள் (சம்சுதின் மவ்லானா, ஜே.எம், 1997).

ஆரம்பத்தில் றவுசர் அணியும் வீதம் மிகமிகக் குறைவாகவே காணப்பட்டது. படித்தவர்கள், ஆசிரியர்கள்கூட சாறத்துடன்தான் பாடசாலைக்குச் சென்றனர். இன்று பெரும்பாலும் றவுசர் பாவனைக்கு வந்துவிட்டது. பள்ளிவாசலுக்கு வெள்ளளைச்சாறம், சேட், தொப்பி, தலைப்பாகை போன்றவற்றை அணிந்து செல்லும் வழக்கம் காணப்பட்டது. இந்நிலை மாறி தொப்பியில்லாது றவுசருடன் பள்ளிவாசல் செல்லும்நிலை இன்று காணப்படுகிறது. ஆரம்பத்தில் இப்பிரதேச பெண்கள் புடவையையே பிரதான ஆடையாக அணிந்தனர். இன்று புடவையின் பாவனை குறைந்து அவற்றிற்குப் பதிலாக 'ஹபாயின்' பாவனை ஒரு பெஷனாக மாறிவருகின்றது.

ஆண்கள் வேட்டி அணிவதும், பெண்கள் புடவை அணிவதும் தமிழ்ப் பண்பாட்டின் அம்சங்களாகக் கருதப்பட்டு தவிர்க்கப்படுகின்றன. அறபிகளிடம் இருந்து கற்றுக்கொண்ட சிறுவால் அணியும் வழக்கம் இன்று முற்றாக ஒழிந்துவிட்டது. கோட்டும் டையும் உயர்ந்தவர்கள் எனக் கருதப்படுவோரின் ஆடைகளாகக் கொள்ளப்படுகின்றன. கழுத்தைக் குளிர்தாக்கிவிடக்கூடாது என்பதற்காக குளிர் வலயத்தில் வாழும் மக்கள் கண்டுபிடித்த இவ் ஆடையை வெப்பவலயத்தில் வாழும் மக்களும் அணிவதுதான் வேடிக்கையான விடயமாகும். ஒரு ஆடை ஒருவரின் ஆரோக்கியத்தைக் கெடுக்காத வகையில் அமைய வேண்டும்.

ஆரம்பகாலத்தில் வாழ்ந்தவர்கள் பாதணி அணிவது மிகக்குறைவாகக் காணப்பட்டது. இன்று விதவிதமான பாதணிகள் நடைமுறைக்கு வந்துள்ளன. அறனாக்கொடி (அரைநாண்கயிறு) அணிவது அருகிக்கொண்டு வருகின்றது. பெண்கள் நகை அணிவதும் ஆண்களில் சிலர் மோதிரம் அணிவதும் இப்பிரதேச மக்களிடம் காணப்படுகிறது.

### விளையாட்டுக்களும் பொழுதுபோக்கு அம்சங்களும்

இப்பிரதேச மக்களது ஆரம்பகால விளையாட்டுக்கள் உடம்பை ஆரோக்கியமாக்கியது மூளையை சுறுசுறுப்பாக்கியது. பல விளையாட்டுக்கள் வீரதீர சாகசங்களாக காணப்பட்டன. இத்தகைய விளையாட்டுக்கள் வியாபார நோக்கங்கொண்டவைகளாக இருக்கவில்லை. பாரம்பரிய விளையாட்டுக்கள் இன்று மறைந்து கிரிக்கட், உதைப்பந்தாட்டம், கரம்போட்டு, காட்ஸ் போன்ற விளையாட்டுக்கள் தோற்றம்பெற்றுள்ளன. வரையறுக்கப்பட்ட நேரத்தையையும் வாழ்க்கையையும் கொண்ட நகரப் பண்பாட்டின் தொடர்ச்சி இங்கும் நீட்சியடைவதால் விளையாட்டுக்களும் சுருங்கிவிட்டன.

கிராமத்தின் பண்புகளையும் நகரத்தின் பண்புகளையும் கலவையாக கொண்டவைகளே பெரும்பாலும் தென்கிழக்குக் கிராமங்களும் நகரங்களும். முஸ்லிம் பெரும்பான்மைமிக்க பகுதிகளில் பாரிய திரையரங்குகளோ களியாட்ட மையங்களோ அரிதாகவே காணப்படுகின்றன. இறுவட்டு வடிவில் விற்கப்படும் இந்திய தமிழ், இந்திப் படங்கள் முஸ்லிம் அல்லாத பிரதேசங்களிலேயே வாங்கப்படுகின்றன. சினிமாக்கள் குறித்த இஸ்லாத்தின் நெறிப்படுத்தப்பட்ட பண்பாட்டுச் சிதைவுக்கெதிரான பார்வை இதற்கான காரணங்களாக இருக்கலாம். இதனால் குடும்பத்தோடு திரையரங்குகளுக்குச் செல்லுதல் மற்றும் களியாட்டங்களில் பங்கெடுத்தல் குறைவாகக் காணப்படுகின்றது. அண்மைய போக்கில் இவற்றில் அசைவுகளும் காணப்படுகின்றன. அநேக இழைஞர்கள் இறுவட்டுக்களை வாங்கி வீட்டில் பார்க்கும் போக்கும் காணப்படுகின்றன. இவற்றோடு தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் திரைப்படங்களும் பலரின் நேரங்களைத் தின்று ஏப்பம் விடுகின்றன. பொல்லடி, சீனடி, சிலம்பு, றபான் அடித்தல், வசைக்கவி பாடல் போன்றவை எப்போதாவது ஒரு கலை நிகழ்ச்சியில் துளிர் விடுகின்றன. சுன்னத் கல்யாண (ஆண்களுக்குச் செய்யப்படும் விருத்த சேதனம்) வீடுகளில் கொட்டி முழங்கப்பட்ட பஜனா இன்று அடியோடு மடிந்துவிட்டது. அன்றைய பஜனாக்கள் கிராமத்து மக்களின் கலை ஆர்வத்தைத் தீர்க்கும் இடமாகவும் மக்களின் மனங்களில் உள நோய்கள் வராமல் தடுக்கும் அரணாகவும் தொழிற்பட்டது.

### தொழில் அமைப்பு

இப்பிரதேச மக்களில் பெரும்பாலானோர் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களையும் வேட்டையாடுதல், மீன்பிடித்தல், வியாபாரம் போன்ற உபதொழில்களையும் செய்தனர். அரச உத்தியோகம் செய்தோர் மிகக் குறைந்தவர்களாகவே காணப்பட்டனர்.

இப்பிரதேசத்தில் காணப்பட்ட நிலமும், நீர்ப்பாசனமும் விவசாயத்தை ஊக்குவித்தன. முஸ்லிம்களின் தொழில் முடியுமானளவு இஸ்லாமிய வரையறைகளைப் பேணியதாகவே இருந்தன. இன்று இத்தொழில்கள் மாற்றம் பெற்றுவருகின்றன. விவசாயம் இலாபகரமான தொழிலாக இன்று இல்லை. வேட்டை பாதுகாப்புக் காரணங்களால் தடைப்பட்டுவிட்டது. கல்விவழி தொழில்பெறும் முயற்சியே இன்று அதிகம் நாடப்படுகிறது. திருமணச் சந்தையில் உயர்கல்வி மூலம் அடையப்பட்ட தொழில்களே அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இங்குள்ள விவசாய சமூகத்தில் காணப்பட்ட போடியார் - வேளாண்மைக்காரர் உறவில் ஏற்பட்ட சடுதியான மாற்றம் போடியின் பிடியிலிருந்து விடுபட்டு வேளாண்மைக்காரர் பிள்ளைகளும் கற்றுத்தேறும் நிலையைத்தூண்டி பாரிய சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களை இப்பிரதேசத்தில் தோற்றுவித்திருக்கின்றது (விக்டர,1997). இதனால் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் தொழில்புரியும் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது. அரச தொழில்களே உத்தமம் எனும் மனோநிலை படிப்படியாக மாற்றம்பெறத் தொடங்கியுள்ளன. சாதாரணதரம் அல்லது உயர்தரம் படித்த மாணவர்கள் சில கற்கைகளை முடித்துவிட்டு வெளிநாடுசென்று தொழில்புரியும் போக்கும் அதிகரித்துள்ளது. விவசாயத்தில் புகுத்தப்பட்ட இயந்திரமயமாக்கம் ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் வேலையின்மையைத் தோற்றுவித்திருக்கின்றது. அதேநேரம் பாரம்பரிய மீன்பிடியான கரைவலை இழுப்பதற்கு ஆளணியற்ற நிலையும் தோன்றியிருக்கின்றது. பல்கலைக்கழகமும்(தென்கிழக்குப் பல்கலைக்கழகம்) துறைமுகமும்(ஒலுவில் துறைமுகம்) ஒரே இடத்தில் அமைந்திருந்தும் கடல்சார் தொழில் விருத்திகள் இப்பிரதேசத்தில் விருத்தியடையவில்லை என்பது பலரது கவலையாகும்.

**மருத்துவம்**

வைத்தியம் இப்பிரதேசத்தில் மிகவும் கண்ணியமான தொழிலாக மதிக்கப்பட்டதனால், இங்கு வைத்தியம் கற்றுக்கொள்வது ஆரம்பகாலத்தில் மிகமுக்கிய சமூக அடையாளமாகக் கருதப்பட்டது. எனினும் உதிரியாகக் கற்பதைவிட பரம்பரை ரீதியாக அது கற்றுக்கொடுக்கப்பட்டதே அதிகமாகவும் விருப்புக்குரிய ஒன்றாகவும் இருந்தது (றசாக், எம்.ஐ, 2007∴2008). பரிசாரி என அழைக்கப்பட்ட பரிகாரம் செய்யும் வைத்தியர்கள் நோய்வாய்ப்பட்டோருக்கு தாவரங்கள், மூலிகைகள், விலங்குகள் போன்றவற்றை பயன்படுத்தி வைத்தியம் செய்தார்கள்.

காடு இம்மக்களின் வாழ்வோடு பின்னிக்கிடந்ததனால் விஷ ஜந்துக்களின் தீண்டல்கள் அடிக்கடி இடம்பெறும் ஒன்றாக இருந்தது. இத்தகைய விஷத்தைப் போக்கும் பலர் இப்பிரதேசத்தில் காணப்பட்டார்கள். இதுதவிர, ஊரின் பல பகுதிகளிலும், விஷத்தை உறுஞ்சுகின்ற விஷக்கற்கள் பலவும் காணப்பட்டன. சின்ன மௌலானா அவர்கள் சின்னப்பள்ளியில் ஒரு விஷக்கல்லை வைத்தார். அன்னாரை தம்பிலுவில் கோவில் பரிபாலன சபையினர் அழைத்துப்போய் அங்கும் ஒரு விஷக்கல்லை வைத்துள்ளார். குடியிருப்பு, வேளாமரத்துவெளி, இசங்கணிச்சீமை போன்ற பகுதிகளிலும் இத்தகைய விஷக்கற்கள் காணப்பட்டன (றசாக், எம்.ஐ, 2007∴2008).

பொதுவாக விஷக்கடிக்கும் குறிப்பாக பாம்புக்கடிக்கும் மக்கள் இத்தகையவர்களிடம் செல்லும் நடைமுறை குறைந்து மக்கள் ஆங்கில வைத்தியம் (Allopathy) மூலம் குணப்படுத்தப்படும் அரச வைத்தியசாலைகளுக்கு செல்லும் வழக்கம் பெரும்பாலும் வந்துவிட்டது. விஷக்கடியும் குறைந்து விட்டது.

உடம்பின் அங்கங்கள் முறிவடையும் போது எண்ணெய் தடவுதல் மற்றும் பத்துப்போடுதல் மூலம் மீள ஒட்டச்செய்யும் நடைமுறைகள் இன்றும் ஓரளவு காணப்பட்டாலும் ஆங்கில வைத்தியமுறையில் குணமாக்க முயலும் செல்நெறியே அதிகம் காணப்படுகின்றது. வீட்டிலே

பிள்ளையைப் பெற்றெடுத்தல், மருத்துவிச்சிகள் பிரசவம் பார்த்தல் போன்றவை முற்றாக வைத்தியசாலை நோக்கி நகர்ந்துவிட்டது.

மக்களிடம் உடனடி நிவாரணம் தேடும் மனோநிலை புகுந்துவிட்டதனால் அதனைக் கொடுக்கும் ஆங்கில வைத்தியமுறைகளையே மக்கள் அதிகம் தேடுகின்றனர். பக்கவிளைவால் பாதிக்கப்பட்டவர்கள், பக்கவிளைவுக்குப் பயந்தவர்கள், ஆங்கில மருத்துவ முறையில் சலித்துப்போனவர்கள் யூனானி, ஆயர்வேதம், சித்த மருத்துவம் போன்ற ஏனைய பதிலீடுகளையும்(யுடவநசயெவைளைந ஸலளவநஅ ழக அநனளைஉைநெ) நாடும் போக்கும் இங்கு காணப்படுகின்றது. இதுதவிர சுயமருத்துவத்தில் (Self-medication) ஈடுபடுவோரையும் இங்கு காணலாம்.

ஜின் வாசலாத்து மூலம் மருத்துவம் செய்யும் நபர்கள் அவர்களை நாடிச்செல்வோர் இப்பிரதேச்ததில் காணப்படுகின்றார்கள். இவ் வைத்தியர்கள் இஸ்ம் அஸ்மா, தண்ணீர் ஓதிக்கொடுத்தல், கழிப்புக் கழித்தல் போன்றவற்றின் மூலம் நோயை விரட்ட முற்படுவார்கள். தமிழர்களிடம் காணப்படும் பேய் வைத்தியத்துக்கு இது ஒப்பானது. இதற்கெதிரான பல பிரச்சாரங்கள் முஸ்லிம் சமயப் போதகர்களால் முடுக்கிவிடப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏனைய பிரதேசங்களைப் போலவே நாள்பட்ட நோய்கள் (ஊாசழெைஉ னளைநயளந) இங்கும் அதிகரித்திருக்கின்றன. கொழும்பில் மட்டும் காணப்பட்ட வைத்திய சேவைகள் பல இங்கும் காலடிக்கு வந்துவிட்டன. வறிய மக்கள் அரச வைத்தியசாலைகளை நாடியபோதும் கொஞ்சம் பணம் படைத்தவர்கள், காலநேரத்தைக் கருத்திற்கொள்பவர்கள், சிரமத்தை விரும்பாதோர் போன்றோர் தனியார் மருத்துவ நிலையங்களை நாடும் போக்கும் இங்கு காணப்படுகின்றது.

ஆண் குறியிலுள்ள முன் தோலை நீக்குவதற்காக 'ஒஸ்தாமாமா' க்களால் காலங்காலமாக செய்யப்பட்ட பணி இன்று வைத்தியர்களால் செய்யப்படுகின்றது. எனினும் குழந்தைகள் அழும்போது காத்தணாவாக்கிவிட்டது எனக்கூறி ஊதிப்பார்க்கும் வழக்கமும் கண்பட்டுவிடும்போது (கண்திரு'டி) தண்ணீர் ஒதிக்குடிக்கும் சிறுவைத்திய மரபும் இங்கு காணப்படவே செய்கின்றது.

### குடிமரபு

இப்பிரதேசத்தின் 'மஸ்ஜித் நிர்வாகம்' குடிமரபு வழியாகவே அதன் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். குடி என்பது தாய்வழி உரிமை கோரும் முறையாகும். தமிழர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட இம்முறை இன்று பரவலாக கைவிடப்பட்டிருக்கின்றது. இஸ்லாமிய சமயம் தந்தைவழி சமுதாய முறைமையையே முன்னுரிமைப்படுத்துகின்றது.

''ஒரே ஊரினுள் திருமணம் செய்யும் அகமணமுறை நீண்டகாலமாக இங்கு நடைமுறையில் இருந்து வருகின்றது'' (சிறாஜ்,எம், 2007∴2008). எனினும் அண்மைய காலத்தில் இந்நடைமுறை வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் திருமணம் முடிக்கும் நடைமுறையாக அசையத் தொடங்கியிருக்கின்றது.

### அரசியல்

சிங்கள மற்றும் தமிழ் கட்சிகளுடனேயே முஸ்லிம் அரசியல் பயணித்து வந்திருக்கின்றது. முஸ்லிம் காங்கிரசின் வருகையின் பின் பெருந்திரளான மக்கள் அக்கட்சியின் ஆதரவாளர்களாக

மாறினர். அண்மைய தென்கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் அல்லாத ஏனைய முஸ்லிம் அரசியல் கட்சிகளும் ஊடுருவி வியாபிக்கின்றன.

**முடிவுரை**

மாற்றம் என்பது தவிர்க்கமுடியாதது. மாற்றம் என்ற ஒன்றே மாறாத விதி என்று சொல்வார்கள். ஏனைய முஸ்லிம்களிடம் தோற்றம்பெற்ற அசைவுகளைப் போலவே தென்கிழக்குப் பிராந்திய முஸ்லிம்களிடமும் பண்பாட்டு அசைவுகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இது தவிர்க்கமுடியாத ஒரு இயங்கியலாகும். இந்த அசைவுகள் ஆரோக்கியத்தையும் நலவாழ்வையும் பாதித்து இருக்கின்றன் மேம்படுத்தியும் இருக்கின்றன. ஆரோக்கியத்தையும் நலவாழ்வையும் மேம்படுத்துவதற்கான அம்சங்கள் கொண்டதாக சமூக அங்கத்தவர்கள் சமூகமயமாக்கல் மூலம் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

**உசாத்துணைகள்**


1. Muhammad Mauroof, A. (1986). A Sociology of Muslims in Southern India and Sri Lanka. In M.A.M. Shukri (ed.), *Muslims of Sri Lanka: Avenues to Antiquity* (pp.319-336). Beruwala: Jamiah Naleemiah Inst.
2. 11. Rao Shankar, C.N. (2003). *Sociology*. New Delhi: S. Chand & Company Ltd.
3. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்களைக்கழகம்
4. அய்யூப், எஸ்.எம்.(2007). பண்பாட்டு அசைவுகள். *அட்டாளைஇ* 1, 65-72
5. அஹமட் லெப்பை, எம்,ஐ.(2007∴2008). கருங்கொடித்தீவு மக்களின் ஆரம்பகால வாழ்க்கைமுறை. *கொடிமலர்.* 1இ 90-100
6. ஷம்சுத்தீன் மௌலானா ஜே.எம். (1997). வாழ்வியலும் பண்பாடும். இல் எஸ். எச். எம் ஜெமீல் (நன.), அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் (ப.159-198). கொழும்பு: முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
7. பாரதி பக்தவத்சல. (1999). *பண்பாட்டு மானிடவியல்.* சென்னை: மணிவாசகம் பதிப்பகம்
8. பரமசிவன், தொ.(2003) *பண்பாட்டு அசைவுகள்.* சென்னை: காலச்சுவடு பதிப்பகம்
9. சிறாஜ்,எம். (2007∴2008). அக்கரைப்பற்றின் சமூக மாற்றம்: சில கவனயீர்ப்புக் குறிப்புகள். கொடிமலர், 1,86-89
10. ரஸாக் எம். ஏ. (2007∴2008). அக்கரைப்பற்றின் பாரம்பரிய வைத்திய முறை. *கொடிமலர்,* 1இ 123-134
11. விக்டர். (1997). *முஸ்லிம் தேசமும் எதிர்காலமும்.* அக்கரைப்பற்று: மூன்றாவது மனிதன் வெளியீட்டகம்